IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.327/2022**

**நாள்– 24.04.2024**

முப்புடாதி

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்த முருகசாமி என்னுடைய கணவர் ஆவார். விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு நான் தகவல் கூறவில்லை. விபத்து சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் என்ன விவரங்கள் கூறப்பட்டிருக்கிறது என்று எனக்கு தெரியாது. விபத்தின் போது என்னுடைய கணவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் 4ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாகும் என்றால் சரிதான். அன்றைய தினம் என்னுடைய கணவர் இந்த வாகனத்தை இறவல் வாங்கித் தான் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். நான் கேள்விபட்டவரை லாரி ஓட்டுநரின் கவனக்குறைவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என்னுடைய மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்று நான் கூறியிருக்கிறேன். 2ம் எதிர்மனுதாரர் லாரியின் உரிமையாளர் ஆவார். 3ம் எதிர்மனுதாரர் லாரியின் காப்பீடு கழகம் ஆகும். 4ம் எதிர்மனுதாரர் என்னுடைய கணவர் வேலை பார்த்த புரோட்டா கடையின் உரிமையாளர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என்னுடைய கணவருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. ஓட்டுநர் உரிமம் விபத்தின்போது தொலைந்துவிட்டது. ஓட்டுநர் உரிமம் தொலைந்த பின்பு போக்குவரத்து அலுவலகத்தில் அதற்கான நகல் எதுவும் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் நகல் எடுக்கவில்லை. என்னுடைய கணவர் 4ம் எதிர்மனுதாரரின் புரோட்டா கடையில் வேலை பார்த்து மாதம் ரூ.30,000/– சம்பாதித்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 5ம்

எதிர்மனுதாரர் என்னுடைய கணவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீடு கழகம் என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரர் இந்த விபத்து சம்பந்தமாக 5ம் எதிர்மனுதாரரிடத்தில் எந்த கோரிக்கையும் தெரிவிக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் இந்த விபத்திற்கு என்னுடைய கணவர் தான் காரணமில்லை என்றுதான் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் காரணம் என்பதால் 1முதல் 3 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு வழங்க வேண்டுமென்றும் 5ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.04.24 17:50:13 +0530